மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர், ரிஷிவந்தியம், திருவெண்ணெய்நல்லூர் வட்டாரங்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விடிய, விடிய கதை கேட்டு, சீதைக்கு இராமன் சித்தப்பா' என்று சொன்ன கதையைப்போல, இப்பொழுதுதான் இதுகுறித்து விரிவான பதிலைச் சொன்னேன். இந்தத் திட்டம் முழுக்க, முழுக்க மத்திய அரசின் திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் கட்டடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்தால் எந்த நிதியும் ஒதுக்கப்படுவதில்லை. ஆகவே, இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை அதிகாரத்தின் அடிப்படையில்தான் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த வட்டாரத்தில் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துருவைப் பெற்று, நடவடிக்கை எடுப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 289, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

289—

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

***30076—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 31]

(அ) தேனி மாவட்டத்திற்கென தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மத்தியக் கூட்டுறவு வங்கியானது மதுரை மாவட்டத்திலுள்ள 639 இணைப்புச் சங்கங்கள் மற்றும் தேனி மாவட்டத்திலுள்ள 268 இணைப்புச் சங்கங்கள் மூலமாக இரண்டு மாவட்ட மக்களின் பயிர்க் கடன் மற்றும் இதர கடன் தேவைகளையும் செவ்வனே நிறைவு செய்துவருகிறது. தற்போது நல்ல நிலையில் இயங்கிவரும் மதுரை மத்திய கூட்டுறவு வங்கியைப் பிரித்து, இரண்டு வங்கிகளாக அமைக்கும்போது, அதற்கான மூலதனச் செலவுகள், நிருவாகச் செலவுகள் போன்ற இதர செலவுகள் அதிகரித்து, தாய் வங்கியான மதுரை மத்திய கூட்டுறவு வங்கியின் நிதி நிலைமை பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், புதிதாக உருவாக்கப்படும் தேனி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும் நலிவடையும் நிலை ஏற்படும். எனவே, தேனி மாவட்டத்திற்கென தனியாக மத்திய கூட்டுறவு வங்கி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம் மதுரை மாவட்டத்திலிருந்து 1997 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டு, தற்பொழுது 17 ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஏறக்குறைய, அனைத்து அரசு அலுவலகங்களும் தேனி மாவட்டத்திற்கென்று தனியாக உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளையை தேனி மாவட்டத்திற்கென்று தனியாக உருவாக்க வேண்டும். இதுகுறித்து, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு*

எடுத்துச் சென்று பரிசீலிக்க வேண்டும். மேலும், மதுரை, தேனி என மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை இரண்டாகப் பிரிக்கும் நேரத்தில், அவை சிறந்த முறையில் செயல்படுவதற்கு A.T.M. வசதி உருவாக்கப்பட வேண்டும். இன்றைய சூழ்நிலையில் வணிக வங்கிகளிலெல்லாம் A.T.M. சேவை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில், குறிப்பாக மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் A.T.M. சேவை இன்றுவரை ஏற்படுத்தப்படவில்லை. எனவே, இதர வங்கிகளுக்கு இணையாக, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளர்களை மேலும் ஈர்க்கும்வகையிலும், சிறந்த முறையில் செயல்படுவதற்கும் A.T.M. சேவையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேனி மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை தேவை என்று கூறியிருக்கிறார்கள். தற்போதுள்ள சூழ்நிலையில் அது எந்த வகையிலெல்லாம் தேவையில்லை என்பதற்குச் சில விளக்கங்களைத் தங்கள்மூலம் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது 11-7-1912-ல் தொடங்கப்பட்டது. இவ்வங்கி தொடங்கப்பட்டு, கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் கழித்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகுதான், அதுவும் 11-1-2012-ல்தான் மத்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி கிடைத்துள்ளது. நூறு ஆண்டுகளாக மத்திய ரிசர்வ் வங்கியின் அனுமதியை வாங்க முடியாமல் இருந்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த பிறகுதான் அனுமதி வாங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

மத்திய கூட்டுறவு வங்கியில் மொத்தம் உள்ள இணைப்புச் சங்கங்களின் எண்ணிக்கை 907. மதுரை மாவட்டத்தில் உள்ள வங்கிகளின் எண்ணிக்கை 639. தேனி மாவட்டத்தில் உள்ள

2014 ஜூலை 31]

வங்கிகளின் எண்ணிக்கை 268. மொத்தம் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 262. அதில் மதுரை மாவட்டத்தில் உள்ள கடன் சங்கங்களின் எண்ணிக்கை 182. தேனி மாவட்டத்தில் உள்ள கடன் சங்கங்களின் எண்ணிக்கை வெறும் 80 மட்டும்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கி புதிதாகத் தொடங்கப்பட்டு, அது முழுமையான வங்கியாகப் பணியாற்ற வேண்டுமானால், அதற்கு நபார்டு வங்கியினுடைய பரிந்துரை பெற்று, அதன் அடிப்படையில் ரிசர்வ் வங்கியின் உரிமம் பெறுவது தற்பொழுது மிகவும் அவசியம். பேராசிரியர் வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் கூட்டுறவுக் கடன் சங்க அமைப்புகளைச் சீரமைக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. கூட்டுறவு வங்கிகளை இணைக்கலாம் என்று மட்டுமே அந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதன் காரணமாக நபார்டு வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளைப் பிரிப்பதற்கு பரிந்துரை செய்வதில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடுதலாக ஒரு தகவலைச் சொல்கின்றேன். இன்றைக்கு நபார்டு வங்கி சில நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. அதாவது 31-3-2015-ல் ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியினுடைய பங்கு மூலதன தேவை விகிதம் 7% இருக்கவேண்டும். இதுவே 31-3-2017-ல் 9% ஆக இருக்கவேண்டும். ஆனால், இன்றைக்கு மதுரை மத்திய கூட்டுறவு வங்கியினுடைய பங்கு மூலதன வீதம் 11.06% மட்டுமே இருக்கிறது. இதை இரண்டாகப் பிரிக்கும்போது இரண்டு வங்கிகளும் நலிவடைந்து விடும். ரிசர்வ் வங்கியினுடைய உரிமம் விலக்களிக்கப்பட்டு விடும். இன்றைக்கு ஒரு மாவட்ட வங்கி இருந்தால்தான் அந்தப் பகுதி மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென்ற நிலையில்லை. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும், அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும், மத்திய கூட்டுறவு வங்கிகள் இன்றைக்கு குக்கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கும்கூட மாவட்டத்திலிருந்தே சேவையாற்ற முடியும். அந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் சிறப்பாகச் செயல்பட்டு, தனியார் வணிக வங்கிகளுக்கு இணையாகவே ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் A.T.M. வசதி உருவாக்க வேண்டுமென்று கேட்டார்கள். சென்னையில் மாவட்டக் கூட்டுறவு

வங்கிகளில் புதிதாக இப்போது A.T.M. மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அனைத்து மாவட்டங்களிலேயும் A.T.M. மையங்கள் விரைவில் அமைக்கப்பட இருக்கின்றன. Core Banking Solutions, Net Banking Solutions அனைத்து வசதிகளும் தனியார் வங்கிகளுக்கு இணையாக இப்போது மாவட்டக் கூட்டுறவு வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் சிறப்பான முறையில் செயல்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து நிறைய கிளைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட வங்கிகள், நகர வங்கிகள், மாநில வங்கிகள் என அனைத்து வங்கிகளும் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.

ஒரு காலத்தில் வங்கியை நாடி மக்கள் சென்றார்கள். இன்றைக்கு மக்களை நாடி வங்கிகள் சென்று கொண்டிருக்கின்றன. தனியார் வங்கிகளுக்கு இணையாக அவற்றுடன் போட்டி போட்டு கூட்டுறவு வங்கிகளும் சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால் அனைத்து கூட்டுறவு வங்கிகளும் கணினிமயமாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள் 2005-லே சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அச்சட்டத்தின்படி அனைத்து மாவட்டக் கூட்டுறவு வங்கிகளையும் கணினிமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து மாவட்டக் கூட்டுறவு வங்கிகளும் கணினிமயமாக்கப்பட வேண்டுமென்ற சட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால், இடையில் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசான கருணாநிதி அரசு இதில் சிறப்பான கவனம் செலுத்தாத காரணத்தினால் வங்கிகள் கணினிமயமாக்கப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு அனைத்து வங்கிகளும் கணினிமயமாக்கப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதலாக ஒரு தகவல். . . ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் இதுவே போதும். நிறைய சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) நீங்கள் விரிவாக விளக்கம் கொடுத்துவிட்டீர்கள், போதும்.

2014 ஜூலை 31]

உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக சிறு விளக்கம் மட்டும் சொல்லிவிடுகிறேன். நம் நாட்டில் மொத்தம் 29 மாநிலங்கள், 7 யூனியன் பிரதேசங்கள், 660 மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால் மாவட்ட வங்கிகளின் எண்ணிக்கை வெறும் 372 தான். இந்திய அளவில் 660 மாவட்டங்களுக்கு வெறும் 372 மாவட்ட வங்கிகள்தான் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, மாவட்டக் கூட்டுறவு வங்கி, மாநில இணையம் எனப் பல்வேறு நிலைகளில் ஒவ்வோர் ஆண்டும் பரிசுகளைப் பெற்று வருகின்றன. இந்தியாவிலேயே சிறந்த வங்கிகளாகப் பரிசு பெற்று வருகின்றன. இந்தியத் திருநாட்டில் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய நடவடிக்கைகளின் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு கூட்டுறவு வங்கிகள் இந்தியாவிற்கே ஒரு முன்னோடி வங்கிகளாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி இந்த மாவட்ட வங்கியைப் பிரிக்க வேண்டிய சூழ்நிலை இப்போது இல்லை; தேவையும் இல்லை என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் விரிவாக பதில் சொல்லிவிட்டார்கள். இனி இதற்கு மேலேயும் கேள்வி கேட்கிறீர்களா? சுருக்கமாகக் கேளுங்கள், மாண்புமிகு அமைச்சரும் சுருக்கமாகச் சொல்லட்டும்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாட்சி புரிந்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மதுரை மத்திய கூட்டுறவு வங்கியைப் பிரித்து

தேனிக்கு கிளை வேண்டுமென்ற கேள்விக்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். நன்றி. தேனி மாவட்டத்திற்கென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகச் சிறப்பான திட்டங்களையெல்லாம் கொடுத்துள்ளார்கள். மருத்துவக் கல்லூரி, கலைக் கல்லூரி உட்பட ஏராளமான திட்டங்களைக் கொடுத்து, தேனி மாவட்டம் இன்று மிகச் சிறப்பான மாவட்டமாக விளங்குகிறது. தேனி மாவட்டம் தொழிலாளிகள், நடுத்தர மக்கள், கிராமங்கள் அதிகம் நிறைந்த மாவட்டம். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த வங்கியைப் பிரிப்பது என்பது பெரிய விஷயம் அல்ல. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் சொன்னாலே தேனி மாவட்டத்திற்குச் சிறப்பாக சலுகைகளை நிச்சயமாகத் தருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பிரித்து எங்களுக்குக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூறி, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்ட வங்கியைப் பிரிப்பது என்பது மாநில அரசு கையிலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குத்தான் கொண்டு போகச் சொன்னார். கொண்டு செல்கிறேன் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவல் அவையில் பதிவாகிவிடக் கூடாது. ஒரு மாவட்ட வங்கியைப் பிரிப்பது மாநில அரசின் கையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்கள் பிரித்து விடுவார்கள் என்கிறார். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலை கிடையாது. ஒரு மாவட்ட வங்கிக்கு ரிசர்வ் வங்கியின் உரிமம் மிக அவசியம். நபார்டு வங்கியினுடைய பரிந்துரையைப் பெற்று, ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்றால்தான் ஒரு மாவட்ட வங்கி இயங்கும். இன்னொன்று, கூடுதலாக மாண்புமிகு உறுப்பினருடைய

2014 ஜுலை 31]

கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார். அங்கு பலதரப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கடன் வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அந்தத் தகவலை மட்டும் சொல்கிறேன். ஒரு மாவட்ட வங்கியினால்தான் கடன் கிடைக்கும் என்ற நிலையில்லை. இன்றைக்கு குக்கிராமத்திலிருந்துகூட எங்கே வேண்டுமானாலும் பணத்தை நாம் போடலாம், எங்கே வேண்டுமானாலும் பணத்தை எடுக்கலாம். எல்லோருக்கும் சேவை செய்யப்படுகிறது. குறிப்பாக, இப்போது தேனி மாவட்டத்தைப் பொறுத்த அளவுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கிறவர்களுக்கு பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சர் ஆனபிறகு, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டீர்கள். போதும். அடுத்து இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012-ல் மதுரை மாவட்டத்தில் இருக்கிறவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிர்க் கடன் மட்டும் ரூ.65.67 கோடி. ஆனால், தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரை, கூட்டுறவுக் கடன் சங்கங்கள் குறைவு. வெறும் 80 தான். மதுரை மாவட்டத்தில் மொத்தமுள்ள 182 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ரூ.65.57 கோடிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 80 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைக் கொண்ட தேனி மாவட்டத்திற்கு 47.53 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடன் கொடுப்பதில் பாரபட்சம் கிடையாது. கடந்த ஆண்டுகூட 95.06 கோடி ரூபாய் மதுரை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், 80 சங்கங்களைக் கொண்ட தேனி மாவட்டத்திற்கு 80 கோடியே 28 இலட்சம் ரூபாய் பயிர்க் கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி, இதர கடன்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போகிறேன். இருந்தாலும் இதிலிருக்கிற நிலைப்பாடு என்னவென்றால், கூட்டுறவு வங்கிக்கு என்று தனிப்பட்ட விதிகள் இருக்கின்றன. எனவே, மாநில அரசு நினைத்தால் ஒரு மாவட்ட வங்கியை உருவாக்க முடியும் என்பது கிடையாது. இன்றைக்கு ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிலே

அது இருக்கிறது. எனவே, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போகிறேன், ஆனால், இதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு, இதனையும் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

290—

காகித ஆலை

***34734—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத்தில் உள்ள சேத்தியாத்தோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தினுள் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தும் வகையில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் சேத்தியாத்தோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் ஒரு காகித ஆலையை அமைக்கும் அளவுக்குத் தேவையான மூலப் பொருட்களான கரும்புச் சக்கை, கூழ் மரங்கள், தண்ணீர் வசதி மற்றும் போதிய இட வசதி கிடைக்க வாய்ப்பில்லை என்பதால் காகித ஆலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*